# மொரட்டுவ மாநகர சபை

# 2026ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

இங்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் மேல் மாகாணத்தினுள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழங்குநர்களைப் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2025-12-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் "மாநகர ஆணையாளர், மொரட்டுவ மாநகர சபை" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

| தொ. இல. | பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
|---|---|
| 1 | அலுவலக காகிதாதிகள் (கணனி காகிதம் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் உட்பட) |
| 2 | அச்சு வேலைகள் (அச்சிடப்பட்ட படிவங்கள் மற்றும் புத்தகங்கள், ஆவணங்கள் போன்றவை) |
| 3 | நூலக புத்தகங்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள் |
| 4 | இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் |
| 5 | வாகனம் மற்றும் விலங்கு உரிமத் தகடுகள் |
| 6 | விளம்பரப் பலகைகள், பெயர்ப்பலகைகள், கட்அவுட்கள், பதாகைகள், ஸ்டிக்கர் அச்சிடுதல் |
| 7 | சீருடைகளுக்குத் தேவையான துணிகள் |
| 8 | மழை அங்கிகள், இறப்பர் பூட்ஸ், காலணிகள், பாதுகாப்பு காலணிகள், மேஸ்கள் போன்றவை. |
| 9 | ஒக்ஸிஜன்/ அசிட்டிலீன் வாயுக்கள் மற்றும் எல்பி வாயு உட்பட பொருட்கள் வழங்குதல் |
| 10 | சுத்தம் செய்தல் தொடர்பான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை, துணி, பிரம்பு கூடை, பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள், மெழுகு, ஹார்பிக், சவர்க்காரம் வகைகள், பைனோல், லைசோல், இறப்பர் கையுறைகள், டோர்ச் பெற்றரிகள், பொலித்தின் பைகள் போன்றவை) |
| 11 | ஆய்வுகூட சிகிச்சை இயந்திர உபகரணங்களை வழங்குதல் |
| 12 | ஆய்வுகூட சிகிச்சை பொருட்களை வழங்குதல் |
| 13 | கிருமிநாசினித் திரவங்கள், முகக் கவசங்கள், கையுறைகள் போன்றவை. |
| 14 | கன்று வகைகள், உரம், கிருமிநாசினிகள் உட்பட தோட்ட அலங்காரத்திற்குத் தேவையான பொருட்கள் |
| 15 | எரிபொருளால் இயங்கும் இயந்திரங்கள் மற்றும் துணைக்கருவிகள் (புகையடிக்கும் இயந்திரங்கள், புல் வெட்டும் இயந்திரங்கள் போன்றவை) வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் |
| 16 | அலுவலக உபகரணங்கள் - மரம், உருக்கு, பிளாஸ்டிக் தளபாடங்கள் (கோப்பு ராக்கைகள், அலுமாரிகள், மேசைகள், நாற்காலிகள், கெபினட் போன்றவை) |
| 17 | மின்சார உபகரணங்கள் (பணம் எண்ணும் இயந்திரங்கள், கூட்டல் இயந்திரங்கள், மின்விசிறிகள், மின்சார கேத்தல்கள் மற்றும் நீர் மோட்டார்கள் போன்றவை) |
| 18 | வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்குதல் |
| 19 | வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலை, பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 20 | வருகை பதிவு இயந்திரங்கள் மற்றும் சிசிடிவி கெமராக்கள் மற்றும் துணைக்கருவிகளை வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 21 | கணனிகள் மற்றும் அது சார்ந்த துணைக்கருவிகள் வழங்குதல் |
| 22 | கணனி இயந்திரங்கள், திருத்தவேலைகள் |
| 23 | கணனி மென்பொருள் தயாரித்து வழங்குதல் |
| 24 | கணனி வலையமைப்பு நிறுவல்கள் மற்றும் பராமரிப்பு |
| 25 | அச்சுப்பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் நகல் பிரதி இயந்திரங்களை வழங்குதல் |
| 26 | அச்சுப்பொறிகள், புகைப்படப் இயந்திரங்கள், நகல் எடுக்கும் இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 27 | அச்சுப்பொறிகளுக்கான டோனர், ரிப்பன்களை வழங்குதல் |
| 28 | மின் சேவைகள், தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் (வயர், சுவிட்சுகள், பல்புகள், பிளக்குகள் போன்றவை மற்றும் தெரு விளக்கு உபகரணங்கள்) |
| 29 | சூரிய சக்தி முறைமைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் |
| 30 | தீயணைப்புக் கருவிகள், தீயை அணைக்கும் திரவங்கள், தீயை அணைக்கும் பாதுகாப்பு ஆடைகள் |
| 31 | முன் பள்ளி உபகரணங்கள் மற்றும் அனைத்து வகையான விளையாட்டு உபகரணங்கள் |
| 32 | டயர்கள், டியூப்கள், ரிம் டேப் மற்றும் அது சார்ந்த பொருட்கள் வழங்குதல் |
| 33 | வாகன பெற்றறிகள் வழங்குதல் (மொரட்டுவ அதிகாரப் பிரதேசத்தின் வழங்குநர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) |
| 34 | வாகன திருத்தவேலைகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் வழங்குதல்<br>I. மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள்<br>II. அனைத்து வகையான 2-சக்கர டிராக்டர்கள் மற்றும் 4-சக்கர டிராக்டர்கள் |
| 35 | வீதி உருளைகள், பெக்ஹோக்கள், எக்ஸ்கவேட்டர்கள் மற்றும் ஸ்கிட் இயந்திரங்கள் உட்பட இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| 36 | கெப்கள், டிப்பர்கள் மற்றும் லொறிகள் உட்பட அனைத்து வகையான வாகனங்களின் திருத்தவேலைகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் |
| 37 | அனைத்து வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களிலும் டிங்கர் திருத்தவேலைகள் மற்றும் நிறப்பூச்சு பூசும் வேலைகளைச் செய்தல் |
| 38 | அனைத்து வகையான வாகனங்கள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| 39 | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் ஆசன திருத்தவேலைகள், கார்பட் இடுதல் மற்றும் அப்ஹோல்ஸ்டரி திருத்தவேலைகள் |
| 40 | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களில் சைலன்சர் முறைமைகளின் திருத்தவேலைகள் |
| 41 | வாகனங்களின் இயந்திர பாகங்களின் திருத்தவேலைகள் தொடர்பான கடைசல் இயந்திர வேலைகள் மற்றும் வாகன இயந்திர பாகங்களின் திருத்தவேலைகள் தொடர்பான கடைசல் இயந்திர வேலைகள் |
| 42 | வாகன திருத்தவேலைகளுக்குத் தேவையான மின்சாரப் பொருட்கள் வழங்குதல் |
| 43 | கேபிள்கள் மற்றும் ஹோஸ் வகைகளின் திருத்தவேலைகள் |
| 44 | துருப்பிடிக்காத நிறப்பூச்சுகள் மற்றும் வாகன நிறப்பூச்சுக்குத் தேவையான அனைத்து திரவங்களையும் வழங்குதல் |
| 45 | வாகனங்களுக்கான உராய்வுநீக்கி எண்ணெய் மற்றும் கிறீஸ் பெற்றுக்கொள்ளல் |
| 46 | பயணிகள் வாகனங்களை கழுவுதல் உள்ளிட்ட சேவைகளை வழங்குதல் |
| 47 | கெப்கள், டிராக்டர்கள், டிப்பர்கள் உள்ளிட்ட வாகனங்களின் திருத்தவேலைகள் |
| 48 | அனைத்து வகையான இரும்பு முடிவுறுத்தல்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் |
| 49 | டிராக்டர்கள், பயணிகள் வாகனங்கள், டிப்பர்கள், கொம்பெக்டர்கள், கலிபவுசர், மரம் வெட்டும் இயந்திரம் மற்றும் அவசர தேவைகளுக்குத் தேவையான இயந்திரரோபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் |
| 50 | பயணிகள் போக்குவரத்து, நிர்மாணப் பொருட்கள் போக்குவரத்து உட்பட போக்குவரத்து சேவைகளை வழங்குதல் |
| 51 | மோட்டார் கிரேடர்கள், பெக்ஹோக்கள், வீதிப் பராமரிப்பு ஆகியவற்றிற்குத் தேவையான சேவைகளை வழங்குதல் |
| 52 | அலுமினியம்சார்ந்த பொருட்கள் வழங்குதல் |
| 53 | கட்டிடப் பொருட்கள் (சீமெந்து, களிமண், செங்கற்கள், ஆற்று மணல், கடல் மணல், மண், கருங்கல், (1/4" -1" ½) கிரவல், ABC உட்பட வீதி பராமரிப்பு தொடர்பான பொருட்கள் போன்றன) |
| 54 | கட்டிட நிர்மாணம் தொடர்பான உபகரணங்கள் (ஏணிகள், கிரில்ஸ், சுத்தியல்கள், தூரிகைகள், சவல், மண்வெட்டிகள், ரேக்கைகள், ஒற்றை சக்கர வண்டிகள், கல் உளி, வெட்டு உளி, வாள்கள், தார் வாளிகள்) |
| 55 | ஹியூம் குழாய்கள் மற்றும் கொங்கிரீட் தூண்கள், எல்லைக் கற்கள், இன்டர்லொக், சீமெந்து புளொக், கொங்கிரீட் தொடர்பான பொருட்கள் மற்றும் கொங்கிரீட் கலவைகள் |
| 56 | தரை ஓடுகள், கிரனைட், டைட்டானியம் மற்றும் தொடர்புடைய பொருட்கள் |
| 57 | கண்ணாடி மற்றும் கண்ணாடி பொருட்கள் |
| 58 | PVC உபகரணங்கள், GI நீர்க்குழாய் பொருத்துதல்கள் போன்ற பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டிகள், துப்புரவேற்பாட்டு உதிரிப்பாகங்கள், கொம்போஸ்ட் பீப்பாய்கள் |
| 59 | மரம் வழங்குதல் (பலகைகள், பராலைகள், ரீப்பைகள் போன்றவை) |
| 60 | தார் மற்றும் கோலாஸ், பிரீமிக்ஸ் |
| 61 | கதிரை இழைத்தல், திருத்தவேலைகள், குஷன் இடுதல் |
| 62 | சீருடைகள் தைத்தல் |
| 63 | மின்பிறப்பாக்கிகள் வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் |
| 64 | உள்ளக தொலைபேசி முறைமை வழங்குதல் மற்றும் தொலைபேசி இணைப்புகளின் திருத்தவேலைகள் |
| 65 | விழா பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் ஒலி முறைமை வழங்குதல் - நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள வழங்குநராக இருக்க வேண்டும் |
| 66 | மரம் வெட்டுதல் |
| 67 | தகனச்சாலை திருத்தவேலைகள் |
| 68 | பீடைக் கட்டுப்பாடு (எலிகள், கரையான்கள், கரப்பான் பூச்சிகள் போன்றவை) |
| 69 | மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குதல் |
| 70 | சட்ட சேவைகளை வழங்குதல் |
| 71 | உத்தரவுபெற்ற நில அளவையாளர் சேவை |
| 72 | கால்நடை மருத்துவ சேவைகள் - விலங்கு கருத்தடை போன்றவை. |
| 73 | கால்நடை மருத்துவ உபகரணங்கள் (நாய்களுக்கான கொலர்கள், Squeeze Cage, காது கிளிப்பர்கள் போன்றவை) |
| 74 | பட்டய மின் பொறியியல் சேவைகள் (ஆலோசனை சேவைகள்) |
| 75 | மனிதவலு வழங்குதல் |
| 76 | தோட்ட அலங்காரங்கள் |
| 77 | மின் கருவி உபகரணங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தல் |
| 78 | பட்டய கட்டமைப்பு பொறியியல் சேவைகள் |
| 79 | பட்டய கட்டிடக்கலைஞர் சேவைகள் |

சபையினால் வழங்கப்படும் நிபந்தனைகள் மற்றும் மூலப்பிரமாணங்கள் சகிதமான விபரப் படிவங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை www.moratuwa.mc.gov.lk எனும் இணைய தளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் itu.moratuwamc@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றைச் செய்து அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். மேற்கூறிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யக்கூடிய வழங்குநர்கள் மட்டும் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு பொருள் / சேவை வகைக்காக மட்டும் பதிவுக் கட்டணம் 3000.00 ரூபா மற்றும் VAT சகிதமாக மொத்தத் தொகை 3540.00 ரூபாவாகும். இந்தப் பதிவுக் கட்டணத்தை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இந்த அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொண்டு அல்லது ''மாநகர ஆணையாளர், மொரட்டுவ மாநகர சபை'' எனும் பெயரில் காசோலை ஒன்றை அனுப்பி கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

**எல்.பீ. மனோஜா எஸ். பதிரண,**
**மாநகர ஆணையாளர்,**
**மொரட்டுவ மாநகரசபை.**

**2025-11-25**
**மொரட்டுவ மாநகரசபை அலுவலத்தில்.**
**தொ. பே. 011-2645251**

### மொரட்டுவ மாநகரசபையில் வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2026

**நிபந்தனைகள்**

1. வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை 2025-12-09ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை மட்டுமே சமர்ப்பிக்கலாம்.
2. பதிவு செய்வதற்காக வழங்குநர்களினால் தாம் பதிவு செய்துகொள்வதற்கு உத்தேசிக்கும் பொருட்கள் / சேவை வகைகள் மற்றும் இதற்கு இயைபான வகைகளின் இலக்கத்தைக் குறிப்பிட்டு முறையாகப் பூர்த்தி செய்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான வகையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
3. மேற்கூறிய ஒவ்வொரு வகைக்கும் இயைபாக வழங்குநர்களாக பதிவு செய்வதற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 3000.00 + 540.00 (VAT) = ரூபா 3540.00 ரூபாவாகும். ஒன்றுக்கு மேற்பட்ட வகைகளுக்காக விண்ணப்பிப்பதற்கு உத்தேசிப்பதானால் ஒவ்வொரு வகைக்கும் 3540.00 ரூபா வீதம் செலுத்த வேண்டும். இந்தப் பணத் தொகையை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இந்த அலுவலகத்தின் சிறாப்பருக்குச் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது ''மாநகர ஆணையாளர், மொரட்டுவ மாநகர சபை'' எனும் பெயருக்கு காசோலை அனுப்பி கொடுப்பனவைச் செய்யலாம்.
4. 2026ஆம் வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே பொதுவாக விலைகள் கோரப்படும் என்பதுடன், சமர்ப்பிக்கப்படும் விலைகளை பொதுவாக 06 மாத காலத்திற்கு மாற்றமடையாமல் நிலையான தன்மையில் வைத்திருக்க வேண்டும். தேவையென உணரும் வேளைகளில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக வேறு வழங்குநர்களிடமிருந்தும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக விலைகளைப் பெற்றுக்கொள்ளும் மற்றும் அதன் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. வழங்குநர்கள் எமக்காக கையிருப்பை வைத்திருக்க வேண்டும் என்பதுடன் மொரட்டுவ மாநகர சபையில் பதிவு செய்துகொள்ளும் போது 60 நாட்களுக்கான கடன் வசதியை வழங்குவதற்கு சகல வழங்குநர்களும் இணக்கத்தைத் தெரிவிக்க வேண்டும்.
6. கட்டளையிடப்படும் பொருட்களை சபைக்குக் கொண்டுவந்து ஒப்படைக்க வேண்டும். இதற்கு கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.
7. 2026ஆம் வருடத்தில் வழங்குநர்களைப் பதிவு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**மொரட்டுவ மாநகரசபையில் பதிவு செய்துகொள்ளும் வழங்குநர்களுக்கு இருக்க வேண்டிய மூலப்பிரமாணம்**

1. விண்ணப்பப் படிவத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.
2. பெறுமதிசேர் வரி செலுத்துபவராக இருந்தால் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.
3. வாகன திருத்தவேலைகள் தொடர்பில் மேல் மாகாண சபையின் அனுமதியைப் பெற்ற மோட்டார் திருத்தகமாகவிருத்தல் விசேட தகுதியாகும் என்பதுடன், ஐந்து அரச நிறுவனங்களுக்கு சேவை வழங்கிய நிறுவனமாகவிருக்க வேண்டும்.
4. விலைகளைக் கோரும்போது அண்மைய 02 வேளைகளுக்கு பதிலளிக்காத வழங்குநர்களிடமிருந்து இனிமேல் விலைகள் கோரப்பட மாட்டாது.
5. கட்டளை வழங்கப்பட்டதன் பின் பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு தவறும் வழங்குநர்கள் மற்றும் உரிய தரமற்ற பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அபகீர்த்தியாளர் பட்டியலில் (Black List) சேர்க்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**மொரட்டுவ மாநகரசபை.**